Pension to Teachers.

* 142 Q.—Thiru D. SANTOSHAM (on behalf of Thiru P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the teacher pensioners have given a representation that their pension be sent by Money Order to them throughout the State, as is done in the case of those in Madras City; and

(*b*) if so, the action taken thereon?

ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரத்தில் உள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு பண அஞ்சல் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படுவதைப் போன்று, மாநிலம் முழுவதிலு முள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் பண அஞ்சல் மூலம் ஓய்வூதியம் கொடுக்குமாறு, ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் முறையீடு ஏதும் செய் துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) நிதிவசதி அடிப்படையில் இது பரிசீலிக்கப்படும்.

Thiru D. SANTOSHAM: Mr. Deputy Chairman, Sir, in the case of other Government servants except teachers the pension amounts are being sent by money order. May I know why in the case of teachers alone, the pension is not being sent by money order?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பரிசீலனையில் இருக்கிறது. நிதி வசதியின் அடிப்படையில் அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : ஏனைய அரசு ஊழியர்களுக்கும் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், இங்குள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் அரசு எந்த நீதியை வழங்குகிறதோ அதே நீதியை மாநிலத்தில் உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் ஏனையவர்களுக்கும் வழங்க வேண்டியது கடமை யல்லவா? எனவே அரசு இதைக் கவனத்தில் கொண்டு விரைவில் இது குறித்துப் பரிசீலனை செய்து முடிவெடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, அது பற்றிய முடிவை விரைவில் அரசாங்கம் எடுக்க இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நிதி அடிப்படையில் இந்தப் பிரச்சினை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்கள். நிதி அடிப்படையில் என்னும்போது, மணியார்டர் கமிஷனுக்காக ஆகும் செலவைக் கணக்கில் கொண்டு பரிசீலிக்கிறார்களா அல்லது வேறு ஏதாவது நிதிப் பிரச்சினையைக் கணக்கில் கொண்டு இதனைப் பரிசீலிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மணியார்டர் கமிஷன் மூலமாக ஆண்டொன்றுக்கு ரூ. 7,88,000 செலவாகும் என்று கருவூலக் கணக்கு இயக்குநர் கூறியுள்ளார். பள்ளிக் கல்வி இயக்குநரும் கருவூலக் கணக்கு இயக்குநரும் தமிழகம் முழுவதும் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்கும் குடும்பநல ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் குடும்பங்களுக்கும் இந்தப் பென்ஷன் பைலட் திட்டத்தை விரிவாக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளனர். கல்வித் துறை இதனை ஒப்புக் கொண்டுள்ளது. நிதித் துறை பென்ஷன் பைலட் திட்டத்தை மறுஆய்வு செய்து வருவதாகவும் அதனால் தமிழகம் முழுவதும் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்கும் குடும்பநல ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் குடும்பங்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவாக்குவது குறித்து பின்னர் ஆராயலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Employees of Local Library Authorities.

* 143 Q.—Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the services of the employees working in Local Library Authorities in the State have been regularised;

(b) if not, whether there is any proposal under the consideration of the Government to regularise their services; and

(c) if so, the stage at which the matter now stands?

நூலக ஆணைக்குழுக்கள் ஊழியர்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில் உள்ள நூலக ஆணைக்குழுவில் பணியாற்றும் ஊழியர்களின் பணிக்காலம் முறைப்படுத்தப்பட்டுள்ளதா?